பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

13 11 2024 Wednesday 12 40 PM

வணக்கம், ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பீகார் மாநிலம், தர்பங்காவில் 12 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.
- ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு 43 தொகுதிகளில் இன்று காலை தொடங்கி, விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.
- ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கை என்ற பெயரில் அதிகாரிகள் தனிப்பட்ட நபர்களின் உடமைகளை சேதப்படுத்தக்கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- அமெரிக்க அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு. டொனால்டு ட்ரம்ப், அரசு நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கு அரசுசாரா துறை ஒன்றை அமைத்துள்ளார்.
- ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

பீகார் மாநிலம், தர்பங்காவில் 12 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

தர்பங்காவில் ஆயிரத்து 260 கோடி ரூபாய் செலவில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டிப் பேசிய பிரதமர், இந்த வளர்ச்சித் திட்டங்களால் பீகார் மக்களின் அன்றாட வாழ்க்கை சிரமமின்றி அமையும் என்று கூறினார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கான பாதையில் இந்த திட்டங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐயாயிரத்து 70 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை தொடங்கி வைத்த பிரதமர், ஆயிரத்து 740 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

காணொலி வாயிலாக நாட்டின் பல்வேறு ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் மருந்தகங்களையும் பிரதமர இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு 43 தொகுதிகளில் இன்று காலை தொடங்கி, விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

காலை 11 மணி நிலவரப்படி 29 புள்ளி மூன்று ஒன்று சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜனநாயக பண்டிகையான தேர்தல் நாளில் மக்கள் உற்சாகத்துடன் சென்று வாக்களிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

இளம் வாக்காளர்களுக்கும், முதன்முறை வாக்காளர்களுக்கும் பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

>>>>><<<<<

10 மாநிலங்களில் உள்ள 31 சட்டப்பேரவை தொகுதிகளில் இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

ராஜஸ்தானில் 7 இடங்களிலும், மேற்கு வங்கத்தில் 6, அஸ்ஸாமில் 5, பீகாரில் 4, கர்நாடகாவில் 3, மத்தியப்பிரதேசத்தில் 2 இடங்களிலும், கேரளா, சத்திஷ்கர், குஜராத், மேகாலயா மாநிலங்களில் தலா ஒரு சட்டப்பேரவை தொகுதியிலும் இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலும் இன்று காலை தொடங்கி வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

காலை 11 மணி நிலவரப்படி 27 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

இந்த தொகுதியில் ஐக்கிய ஜனநாயக கூட்டணி சார்பில் திருமதி. பிரியங்கா காந்தியும், இடதுசாரி ஜனநாயக முன்னணி சார்பில் திரு. சத்யன் மொகேரியும், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திருமதி. நவ்யா ஹரிதாசும் போட்டியிடுகின்றனர்.

>>>>><<<<<

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

288 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இம்மாதம் 20ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அமித் ஷா, தூலே, ஜல்கான் உள்ளிட்ட இடங்களில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத், தானே, வாஷிம் உள்ளிட்ட இடங்களிலும், மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி, சந்திரபூர், நாக்பூர் ஆகிய இடங்களிலும் பிரச்சாரம் செய்கின்றனர்.

தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி மும்பையிலும், ராஜஸ்தான் துணை முதலமைச்சர் திரு. சச்சின் பைட், சந்திரபூர், வார்தா, மும்பை உள்ளிட்ட இடங்களிலும் பிரச்சரம் மேற்கொள்கின்றனர்.

சிவசேனாவின் UBT பிரிவு தலைவர் திரு. உத்தவ் தாக்கரே, சிந்து துர்க்கில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

>>>>><<<<<

ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கை என்ற பெயரில் அதிகாரிகள் தனிப்பட்ட நபர்களின் உடமைகளை சேதப்படுத்துவதற்கு உரிமையில்லை என்று உச்சநீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

எந்தவொரு ஆக்கிரமிப்பை அகற்றும் பணியும், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தன்னிச்சையாக அதிகாரிகள் செயல்படக்கூடாது என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயக நிர்வாக கட்டமைப்பில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் கூறியுள்ளனர்.

ஆக்கிமிப்பை அகற்றும் நடவடிக்கைகளுக்கு முன்னதாக, சட்டபூர்வமாக நோட்டீஸ் அனுப்பப்பட வேண்டும் என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நோட்டீஸ் மீதான விளக்கம் பெறுவதற்கு 15 நாட்கள் காலஅவகாசம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நபர் நேரடியாக அதிகாரிகளால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு, உரிய காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை வீடியோ பதிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் அந்த தீர்ப்பில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

>>>>><<<<<

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை பணிகளை மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு இன்று சென்னையில் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும், மழைநீரை அகற்றுவதற்கு தேவையான இயந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - நேரு 46 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஷேக்தாவூத் தர்ஹாவில் இன்று அதிகாலை சந்தனக்கூடு ஊர்வலம் நடைபெற்றது.

ஏராளமான மக்கள் இதில் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 30 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

அமெரிக்க அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு. டொனால்டு ட்ரம்ப், அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்கான அரசுசாரா துறை ஒன்றை அமைத்துள்ளார்.

டெஸ்லா நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி Elon Musk மற்றும் தொழிலதிபர் திரு. விவேக் ராமசாமி ஆகியோர் அரசின் இந்த புதிய துறையை தலைமையேற்று நடத்துவார்கள் என்று அவர் அறிவித்துள்ளார்.

அரசு துறையில் அதிகாரப் பகிர்வை சீரமைப்பது, கடுமையான விதிமுறைகளை தளர்த்துவது, வீண் செலவுகளை குறைப்பது ஆகிய முக்கியப் பணிகள் இந்த துறை மூலம் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு வெளியிலிருந்து செயல்படும் இந்த துறை, சுதந்திரமாக செயல்பட்டு அரசுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் எல்லைப்பகுதியில் மற்ற நாடுகளிலிருந்து அதிக அளவில் அகதிகள் ஊடுருவுவதை தடுப்பதற்காக முன்னாள் குடியுரிமை அதிகாரி திரு. Tom Homanth தலைமையில் எல்லைக் கண்காணிப்பு அமைப்பு ஒன்றையும் திரு. டிரம்ப் அமைத்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள அகதிகளை, அவர்களது சொந்த நாட்டிற்கு அனுப்புவதற்கான பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்ளும்.

அமெரிக்காவின் ஐ.நா தூதராக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. எல்ஸி ஸ்டெஃபானிக் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், யுக்ரைன், பாலஸ்தீனம் உள்ளிட்ட விஷயங்களில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து ஐ.நா பொதுச்சபையில் அவர் எடுத்துரைப்பார் என்றும் திரு. டிரம்ப் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

Kumamoto-வில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-8 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Busanan-ஐ வென்றார்.

>>>>><<<<<

மொனாக்கோவில் நடைபெற்று வரும் மான்டி கார்லோ ஸகுவாஷ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா இன்று இங்கிலாந்தின் - Alicia meed-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>><<<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா, ஸ்ரீவள்ளி ரஷ்மிகா ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பிரிஸ்பைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அங்கிதா ரெய்னா 6-3, 6-3 என்ற செட்கணக்கில் தைவானின் Ya Yi Yang-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ஸ்ரீவள்ளி ரஷ்மிகா 6-3, 7-6 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் Naiktha Bains-ஐ வென்றார்.

>>>>><<<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

செஞ்சூரியனில் இப்போட்டி இரவு எட்டரை மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

அஹமதாபாதில் இன்று தொடங்கிய தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் ரயில்வே அணி முதல் இன்னிங்ஸில் உணவு இடைவேளை வரை 2 விக்கெட் இழப்புக்கு 88 ரன் எடுத்துள்ளது.

>>>>>END<<<<<